# நாட்டை ஆளப் பிறந்ததாக நினைக்கிறது சோனியா குடும்பம்

## பிரதமர் மோடி கடும் விமர்சனம்



மகாராஷ்டிர மாநிலம் சோலாபூரில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பாஜக தேர்தல் பிரசார பொதுக் கூட்டத்தில் பங்கேற்ற பிரதமர் மோடி.

**சிமூர் (மகாராஷ்டிரம்), நவ. 12:** தாங்கள் நாட்டை ஆட்சி செய்யப் பிறந்தவர்கள் என்பதே காங்கிரஸ் 'அரச குடும்பத்தின்' (சோனியா காந்தி குடும்பத்தை குறிப்பிடுகிறார்) மனநிலை என்று பிரதமர் நரேந்திர மோடி கடுமையாக விமர்சித்தார்.

'நாடு சுதந்திரமடைந்த பிறகு தலித் சமூகத்தினர், பழங்குடியினர் மற்றும் பின்தங்கிய வகுப்பினரை காங்கிரஸ் முன்னேற அனுமதிக்காததற்கு இந்த மனநிலையே காரணம்' என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

288 உறுப்பினர்களைக்கொண்ட மகாராஷ்டிர சட்டப் பேரவைக்கு நவம்பர் 20-ஆம் தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறவுள்ளது. இம்மாநிலத்தில் ஆளும் மகாயுதி கூட்டணிக்கும் (பாஜக-முதல்வர் ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான சிவசேனை, துணை முதல்வர் அஜித் பவார் தலைமையிலான தேசியவாத காங்கிரஸ்), எதிர்க்கட்சிகளின் மகா விகாஸ் அகாடி கூட்டணிக்கும் (காங்கிரஸ்-சிவசேனை (உத்தவ்)-தேசியவாத காங்கிரஸ் (சரத் பவார்) உள்ளிட்ட கட்சிகள்) இடையே கடும் போட்டி நிலவுகிறது.

தேர்தலையொட்டி, சந்திரபூர் மாவட்டத்தின் சிமூர் பகுதியில் செவ்வாய்க்கிழமை பாஜக பிரசாரக் கூட்டத்தில் பங்கேற்ற பிரதமர் மோடி, காங்கிரஸ் மற்றும் அதன் கூட்டணி கட்சிகளை கடுமையாக விமர்சித்தார். அவர் பேசியதாவது:

தலித் சமூகத்தினர், பழங்குடியினர், பின்தங்கிய வகுப்பினருக்கான இடஒதுக்கீடு என்றாலே காங்கிரஸுக்கு பிடிக்காது. கடந்த 1980-களில் ராஜீவ் காந்தி தலைமையில் செயல்பட்டபோது, மேற்கண்ட பிரிவினருக்கான சிறப்பு உரிமைகள் குறித்து அக்கட்சி பகிரங்கமாக கேள்வியெழுப்பியது. இது, இடஒதுக்கீட்டுக்கு எதிரான அவர்களின் மனநிலையின் பிரதிபலிப்பாகும்.

**'ஒற்றுமையே பாதுகாப்பு':** நாட்டின் ஒற்றுமையை சீர்குலைக்க ஜாதி ரீதியிலான ஆபத்தான விளையாட்டில் ஈடுபட்டுள்ளது காங்கிரஸ். பழங்குடியினரை ஜாதிகள் அடிப்படையில் பிளவுபடுத்தினால், அவர்களின் வலிமையும் அடையாளமும் இழக்கப்படும். எனவே, காங்கிரஸின் சதித் திட்டத்துக்கு இரையாகிவிடாமல், மக்கள் ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும்.

'ஒற்றுமையே பாதுகாப்பு' என்பதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். நீங்கள் (மக்கள்) ஒற்றுமையாக இல்லாவிட்டால், உங்களின் இடஒதுக்கீட்டு உரிமையை காங்கிரஸ் பறித்துவிடும்.

எதிர்க்கட்சிகளின் மகா விகாஸ் அகாடி கூட்டணி, ஊழல்களின் நாயகன்; வளர்ச்சித் திட்டங்களுக்கு முட்டுக்கட்டைப் போடுவதில் அக்கூட்டணி 'முனைவர்' பட்டம் பெற்றுள்ளது. அதிலும் குறிப்பாக காங்கிரஸ் 'இரட்டை முனைவர்' பட்டம் பெற்றதாகும்.

**பயங்கரவாதமும், பிரிவினைவாதமும்..:** ஜம்மு-காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து அளித்துவந்த அரசமைப்புச் சட்டத்தின் 370-ஆவது பிரிவு நீக்கப்பட்டதன் மூலம் 70 ஆண்டுகளுக்கு பிறகு ஒரே அரசமைப்புச் சட்டத்தின்கீழ் ஒட்டுமொத்த தேசமும் கொண்டுவரப்பட்டது. இப்பிரிவை மீட்டெடுக்க காங்கிரஸ் மற்றும் அதன் கூட்டணி கட்சிகளை மக்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்கள்.

ஜம்மு-காஷ்மீரில் வன்முறை மற்றும் பிரிவினைவாதத்தின் மூலம் இக்கட்சிகள் அரசியல் ரீதியில் பலனடைகின்றன. பயங்கரவாதமும் பிரிவினைவாதமும் காஷ்மீர் பல்லாண்டுகளாக பற்றியெரிய காரணங்களாகும். 370-ஆவது பிரிவால்தான் இந்த நிலை ஏற்பட்டது.

காங்கிரஸின் பரம்பரைச் சொத்தான இப்பிரிவை நீக்கிய பிறகே இந்தியாவுடன், இந்திய அரசமைப்புச் சட்டத்துடன் காஷ்மீர் ஒருங்கிணைக்கப்பட்டது.

**பாஜக வெற்றி உறுதி:** மகாராஷ்டிர வளர்ச்சிக்கான உத்தரவாத பத்திரமே பாஜகவின் தேர்தல் அறிக்கையாகும். இம்மாநிலத்தில் பெரும்பான்மை பலத்துடன் மகாயுதி (பாஜக கூட்டணி) வெற்றி பெறுவது உறுதி என்று நம்பிக்கை தெரிவித்தார் பிரதமர் மோடி.

# ஏர் இந்தியா – விஸ்தாரா ஒருங்கிணைப்பு நிறைவு



**புது தில்லி,நவ. 12:** ஏர் இந்தியா மற்றும் விஸ்தாரா விமான நிறுவனங்களை ஒருங்கிணைக்கும் பணி செவ்வாய்க்கிழமையுடன் நிறைவடைந்தது.

விஸ்தாராவில் ஏர் இந்தியாவின் உரிமையாளரான டாடா சன்ஸ் நிறுவனத்துக்கு 51 சதவீத பங்கும், சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் நிறுவனத்துக்கு 49 சதவீத பங்கும் இருந்தன. இந்த நிலையில், ஏர் இந்தியாவுடன் விஸ்தாராவை ஒருங்கிணைக்கவிருப்பதாக டாடா சன்ஸ் கடந்த 2022-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அறிவித்தது.

அந்த ஒருங்கிணைப்பின் மூலம் நாட்டின் பெரிய சர்வதேச விமான நிறுவனம், இரண்டாவது பெரிய உள்நாட்டு விமான நிறுவனம் ஆகிய பெருமைகளை ஏர் இந்தியா பெறும் என்று டாடா குழுமம் அப்போது கூறியது.

இந்தச் சூழலில், ஏர் இந்தியா – விஸ்தாரா ஒருங்கிணைப்பு நிறைவுபெற்றதாக தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே விஸ்தாராவில் 49 சதவீத பங்குகளைக் கொண்டுள்ள சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் நிறுவனம், இந்த ஒருங்கிணைப்புக்குப் பிறகு நிறுவனத்தின் அளவு பெரிதாகியுள்ளதால் அதில் கூடுதலாக ரூ.3,194.5 கோடி முதலீடு செய்யவிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# 'மாநில வளர்ச்சிக்கு நிலையான அரசு அவசியம்'

**சோலாபூர், நவ. 12:** மகாராஷ்டிரத்தின் வளர்ச்சிக்கு நிலையான அரசு அவசியம்; பாஜக கூட்டணியால் மட்டுமே அது சாத்தியமாகும் என்று பிரதமர் மோடி குறிப்பிட்டார்.

சோலாபூரில் நடைபெற்ற பாஜக பிரசாரக் கூட்டத்தில், அவர் பங்கேற்றுப் பேசியதாவது: எதிர்க்கட்சிகளின் மகா விகாஸ் அகாடி கூட்டணியில் முதல்வர் பதவிக்கு சண்டையிட்டு வருகின்றனர். ஒரு கட்சி முதல்வர் வேட்பாளர் பெயரை அறிவிப்பதும் மற்ற கட்சிகள் அதை நிராகரிப்பதும் தினமும் நிகழ்கிறது. இத்தகைய கட்சிகள் தேர்தலில் வென்றால், நிலையான அரசை அளிக்க முடியாது. நாட்டை பல்லாண்டுகளாக ஆட்சி செய்தபோதிலும், காங்கிரஸால் பல பிரச்னைகளுக்கு தீர்வு காண முடியவில்லை. மக்களை பிரச்னையின் பிடியிலேயே அக்கட்சி வைத்திருந்தது. அக்கட்சியின் அணுகுமுறையால் விவசாயிகள் உள்பட அனைத்து தரப்பினரும் பாதிப்பை எதிர்கொண்டனர். ஆனால், பாஜக ஆட்சி பொறுப்பேற்ற பிறகு மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காணப்பட்டு வருகிறது. பல்லாண்டுகளாக கிடப்பில் போடப்பட்ட திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மகாராஷ்டிரத்தில் மாநில அரசால் செயல்படுத்தப்படும் பெண்களுக்கு மாதாந்திர உதவித் தொகை வழங்கும் திட்டத்தை பாராட்டி, ஒவ்வொருவரும் பேசுகின்றனர். இதனால், எதிர்க்கட்சிகள் தூக்கமிழந்துவிட்டன என்றார் பிரதமர்.

# பெண்கள் சுயகௌரவத்துடன் வாழவே உதவித்தொகை

## ராகுல் விளக்கம்



**புது தில்லி, நவ. 12:** பெண்கள் சுயகௌரவத்துடன் வாழவும், விலைவாசி உயர்வை எதிர்கொள்ளவும் காங்கிரஸ் மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் ஆளும் மாநிலங்களில் மகளிர் உதவிதொகை வழங்கப்படுகிறது என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி விளக்கமளித்துள்ளார்.

மகளிருக்கு மாதந்தோறும் உதவித்தொகை வழங்குவது இப்போது பல்வேறு மாநிலங்களில் பிரபலமாகி வருகிறது. தேர்தல் நடைபெறும் மாநிலங்களில் அரசியல் கட்சிகள் அத்திட்டத்தை செயல்படுத்துவோம் என்றும், ஏற்கெனவே அமலில் இருந்தால் உதவித்தொகையை உயர்த்தி வழங்குவதையும் முக்கிய வாக்குறுதியாக வழங்கி வருகின்றன. பெண்களின் வாக்குகளைக் கவரும் முக்கிய வாக்குறுதியாக இத்திட்டம் உள்ளது.

ஜார்க்கண்ட் மாநிலத்தில் ஆளும் ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா, காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் அடங்கிய கூட்டணி இந்த உதவித் தொகையை ரூ.2,500-ஆக உயர்த்தி வழங்குவதாக வாக்குறுதி அளித்துள்ளது. அம்மாநிலத்தில் 43 தொகுதிகளில் முதல்கட்டமாக புதன்கிழமை (நவ. 13) வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. இந்நிலையில் ராகுல் காந்தி செவ்வாய்க்கிழமை 'எக்ஸ்' வலைதளத்தில் வெளியிட்ட பதிவில், 'பெண்கள், விவசாயிகள், இளைஞர்கள், ஏழை மக்களின் கைகளுக்கு பணம் செல்ல வேண்டும் என்று 'இண்டியா' கட்சிகள் திட்டங்களை செயல்படுத்துகின்றன.

ஆனால், தங்கள் கோடீஸ்வர தொழிலதிபர் நண்பர்களின் கைகளில் நாட்டின் செல்வம் அனைத்தும் குவிய வேண்டும் என்று பாஜக கருதுகிறது. பெண்கள் சுயகௌரவத்துடன் வாழ வேண்டும். விலைவாசி உயர்வை எதிர்கொண்டு குடும்பத்துக்கு தேவையான அத்தியாவசியப் பொருள்களை வாங்க வேண்டும். குழந்தைகளின் எதிர்காலத்துக்காக திட்டமிட வேண்டும். இதற்காகவே அவர்களுக்கு காங்கிரஸ் மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் ஆளும் மாநிலங்களில் உதவித்தொகை வழங்கப்படுகிறது.

ஜார்க்கண்ட் மாநில தேர்தலில் ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகள் மீண்டும் ஆட்சிக்கு வரும்போது மகளிருக்கு வழங்கப்படும் உதவித்தொகை ரூ.2,500-ஆக உயர்த்தி வழங்கப்படும். இதன் மூலம் 53 லட்சம் பெண்கள் பயனடைவார்கள்' என்று கூறியுள்ளார்.

# லாபப் பாதையில் பொதுத்துறை வங்கிகள்

## நிதியமைச்சகம் தகவல்

**புது தில்லி, நவ. 12:** 'நடப்பு நிதியாண்டின் முதல் அரையாண்டில் பொதுத் துறை வங்கிகளின் செயல்பாடுகள் மிகவும் சிறப்பாக உள்ளன. நிகர லாபம் 26 சதவீதம் அதிகரித்துள்ளது. வாராக்கடன் அளவு குறைந்துள்ளது. வங்கிகளின் வர்த்தக செயல்பாடுகளும் வேகமடைந்துள்ளது' என்று நிதியமைச்சகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நிதியமைச்சகம் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

பாரத ஸ்டேட் வங்கி (எஸ்பிஐ), பஞ்சாப் நேஷனல் பேங்க் உள்ளிட்ட 12 பொதுத் துறை வங்கிகளின் மொத்த வர்த்தகம் கடந்த ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையிலான காலகட்டத்தில் ரூ.236.04 லட்சம் கோடியாக உள்ளது. இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது 11 சதவீதம் அதிகமாகும்.

வங்கிகளுக்கு வரும் டெபாசிட் மற்றும் வங்கிகள் அளிக்கும் கடனும் 9 முதல் 13 சதவீதம் வரை அதிகரித்துள்ளது. வங்கிகளின் நிகர லாபம் ரூ.1,50,023 கோடியாகும். இதுவே கடந்த ஆண்டின் முதல் காலாண்டில் 85,520 கோடியாக ஆக இருந்தது. வாராக்கடன் அளவும் குறைந்துள்ளது.

வங்கித் துறையில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள், வங்கிகளின் செயல்பாடுகள் குறித்த தொடர் கண்காணிப்பு ஆகியவற்றின் மூலம் பல்வேறு பிரச்னைகளுக்கு தீர்வுகாணப்பட்டுள்ளது. வங்கிகளின் செயல்பாடும் மேம்பட்டுள்ளது.

பொதுத் துறை வங்கிகள் தொழில்நுட்பரீதியாக சிறப்பாக மேம்பட்டுள்ளன. கடன் வழங்குவதில் கூடுதல் பொறுப்புடைமை கடைப்பிடிக்கப்படுகிறது. இணையம், கைப்பேசி செயலி வழியிலான வங்கி சேவை சிறப்பாக மேம்படுத்தப்பட்டுள்ளது. இணையவழித் தாக்குதல்களில் வாடிக்கையாளர்களைக் காக்க நவீன தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன என்று கூறப்பட்டுள்ளது.

# நடிகர் ஷாருக் கானுக்கு கொலை மிரட்டல்

## ராய்பூர் வழக்குரைஞர் கைது

**ராய்ப்பூர், நவ. 12:** பாலிவுட் நடிகர் ஷாருக் கானிடம் ரூ. 50 லட்சம் கோரி கொலை மிரட்டல் விடுத்ததாக சத்தீஸ்கர் தலைநகர் ராய்பூரைச் சேர்ந்த வழக்குரைஞரை மும்பை போலீஸார் கைது செய்தனர்.

'ரூ. 50 லட்சத்தைக் கொடுக்கா விட்டால் நடிகர் ஷாருக் கானைக் கொலை செய்து விடுவேன்' என்று மிரட்டல் விடுத்து மும்பையில் பாந்த்ரா காவல் நிலையதுக்கு கடந்த 5ஆம் தேதி தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது. இது தொடர்பாக பாந்த்ரா போலீஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர். விசாரணையில் சத்தீஸ்கர் தலைநகர் ராய்பூரைச் சேர்ந்த வழக்குரைஞர் ஃபைசன் கானின் தொலைபேசி எண்ணில் இருந்து கொலை மிரட்டல் தொடர்பான அழைப்பு வந்தது தெரிய வந்தது.

இதையடுத்து மும்பை போலீஸ் குழுவினர் மேல் விசாரணைக்காக ராய்ப்பூருக்கு கடந்த 7ஆம் தேதி சென்றனர். வழக்குரைஞர் ஃபைசன் கானை அவர்கள் விசாரணைக்கு அழைத்தனர். அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையின் போது தனது கைப்பேசி தொலைந்து போய்விட்டதாகவும் இது தொடர்பாக ராய்ப்பூரில் உள்ள கமார்தி காவல் நிலையத்தில் கடந்த 2ஆம் தேதி புகார் அளித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

எனினும், தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணையில் அவர் கூறியது பொய் என்பதும் ஷாருக் கானுக்கு கொலை மிரட்டல் விடுத்து பேசியதும் அவர்தான் என்பதும் தெரிய வந்தது. இதையடுத்து வழக்குரைஞர் ஃபைசன் கானை மும்பை போலீஸார் செவ்வாய்க்கிழமை கைது செய்தனர்.

இது தொடர்பாக ராய்ப்பூர் காவல் கண்காணிப்பாளர் சந்தோஷ் சிங், பிடிஐ செய்தியாளரிடம் கூறுகையில் 'பாண்ட்ரி காவல் நிலைய சரகத்துக்கு உட்பட்ட பகுதியில் வழக்குரைஞர் ஃபைசன் கானை கைது செய்திருப்பதாக மும்பை போலீஸார், ராய்ப்பூர் போலீஸாருக்கு தகவல் தெரிவித்துள்ளனர்' என்றார்.

இதையடுத்து ஃபைசன் கானை ராய்ப்பூரில் சிவில் நீதிபதி தாரிணி ராணா முன்பு மும்பை போலீஸார் ஆஜர்படுத்தினர். அவரை மும்பைக்கு அவைத்துச் சென்று வரும் 15ஆம் தேதி வரை காவலில் வைத்து விசாரிப்பதற்கு நீதிபதி அனுமதி அளித்தார்.

முன்னதாக மற்றொரு பாலிவுட் நடிகர் சல்மான் கானுக்கு அண்மையில் தாதா லாரன்ஸ் பிஷ்ணோய் கும்பலைச் சேர்ந்தவர்களிடம் இருந்து தொடர்ந்து கொலை மிரட்டல்கள் வந்தன. அதைத் தொடர்ந்து நடிகர் ஷாருக் கானுக்கு கடந்த வாரம் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.


**படிவம் NO.I.T.C.P.17**

(பார்க்கவும்- வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் கடன் மீட்பு சட்டம், 1993-இன் பிரிவுகள் 25 முதல் 29 வரை மற்றும் தொடர்புடைய வருமானவரி சட்டம் , 1961-க்கு இரண்டாவது அட்டவணையின் விதி 53)

**ஒரு விற்பனை பிரகடனத்தை அமைப்பதற்கான அறிவிப்பு**

**கடன் மீட்புத் தீர்ப்பாயம் III, சென்னை,**

**மீட்பு அலுவலர் முன்னிலையில்**

6வது தளம், கூடுதல் அலுவலக கட்டடம், சாஸ்திரி பவன், நுங்கம்பாக்கம், சென்னை-600006 தொலைபேசி: 044-28498182

TRC எண். 19/2023 — நாள்: 05/11/2024

இவர்களது விவகாரம்

ARCIL, சென்னை ....மனுதாரர் / சான்றுடையவர்

-எதிர்-

M/s சாய் சரவணன் & இன்னும் 25 பிறர் ....எதிர்மனுதாரர்கள் / சான்றிதழ் கடன்காரர்கள்

பெறுநர்:

1. M/s சாய் சரவணன் & கம்பெனி, அதன் பிரதிநிதியாக பங்குதாரர் K.ராமசாமி, 227, தம்புச் செட்டி தெரு, சென்னை-600001.
2. K.ராமசாமி, த/பெ காளியண்ண கவுண்டர், 227, தம்புச் செட்டி தெரு, சென்னை-600001.
3. சின்னசாமி, வீட்டு எண் 31, வீட்டுவசதி வாரிய காலனி, திருச்சி சாலை, நாமக்கல்.
4. V.பாலசுப்ரமணியன், 1/5, பிள்ளையார் கோயில் தெரு, பெருகப்பட்டி, நாமக்கல்
5. P.செல்லப்பன் (காலஞ்சென்றவர்) த/பெ. பழனியப்பன்
6. R.கமலா (காலஞ்சென்றவர்) க/பெ K.ராமசாமி
7. C.நல்லம்மாள், க/பெ. சின்னசாமி, வீட்டு எண் 31, வீட்டுவசதி வாரிய காலனி, திருச்சி சாலை, நாமக்கல்.
8. R.சரவணா, த/பெ. K.ராமசாமி, 227, தம்புச் செட்டி தெரு, சென்னை-600001.
9. R.கலைமாமி, த/பெ. K.ராமசாமி, 227, தம்புச் செட்டி தெரு, சென்னை-600001.
10. P.தனபாக்கியம், க/பெ காலஞ்சென்ற C. பழனியப்பன், TNHB காலனி, முல்லை நகர், திருச்சி சாலை, நாமக்கல்.
11. P.முவந்திரன், த/பெ. காலஞ்சென்ற C. பழனியப்பன், TNHB காலனி, முல்லை நகர், திருச்சி சாலை, நாமக்கல்.
12. P.முகிலரசன், த/பெ. காலஞ்சென்ற C. பழனியப்பன், TNHB காலனி, முல்லை நகர், திருச்சி சாலை, நாமக்கல்.
13. P.முகிலரசன், TNHB காலனி, முல்லை நகர், திருச்சி சாலை, நாமக்கல்.
14. C.ராவணன், த/பெ. P. செல்லப்பன், 10 ஹனி நிகாஷ் குடியிருப்பு, TNHB மாருதி நகருக்கு அருகில், ரெட்டிபட்டி கிராமம், நாமக்கல்.
15. C.முத்தியா த/பெ. P. செல்லப்பன், செல்லப்பன் ஹாலோ பிரிக்ஸ், திருச்சி ரோடு, நேரு நகர், நாமக்கல்
16. S.சரோஜா, க/பெ. K. சுப்பிரமணி, எண் 3-A, மஜீத் தெரு, மஜீத் தபால் நிலையம் அருகே, சேந்தமங்கலம் சாலை, நாமக்கல்.
17. S.ஜெயக்குமார், த/பெ. K. சுப்பிரமணி, எண் 3-A, மஜீத் தெரு, மஜீத் தபால் நிலையம் அருகே, சேந்தமங்கலம் சாலை, நாமக்கல்.
18. R.கலைமணி, த/பெ. K.ராமசாமி, 4/758-B, நேரு நகர், திருச்சி சாலை, நாமக்கல்.
19. R.சரவணன், த/பெ. K.ராமசாமி 4/758-B, நேரு நகர், திருச்சி சாலை, நாமக்கல்.
20. R.கமலா (காலஞ்சென்றவர்)
21. பழனிசாமி, சரஸ்வதி மளிகை ஸ்டோர்ஸ், ரமேஷ் தியேட்டர் எதிரே, சின்னையா லாட்ஜ் கட்டடம், திருச்சி சாலை, நாமக்கல்.
22. V.காந்திமதி, 2/69, பொன் விழா நகர், திருச்சி சாலை, நாமக்கல்.
23. M.பார்வதி, செங்கழனி பிள்ளையார் கோயில் தெரு, எண். 8 (பழைய எண். 4) வடக்குத் தெரு, கடைவீதி, நாமக்கல்.
24. K.R.மணி, த/பெ ராமசாமி, மாரியம்மன் கோயில் தெரு, எண் 50, நாமக்கல் நகரம் நாமக்கல்.
25. K.யமுனா, க/பெ R. கலைமணி, 6/371, மாருதி நகர், வாகுரம்பட்டி கிராமம், நாமக்கல் தாலுகா.
26. ராமாயீ, க/பெ R.காளியண்ண கவுண்டர், 6/371, மாருதி நகர், வாகுரம்பட்டி கிராமம், நாமக்கல் தாலுகா.

இப்பவும், O.A.எண். 398/2015 மீதான 19/02/2019 நாளிடப்பட்ட மீட்பு சான்றிதழ் எண். 63/2019-ஐ செயல்படுத்தி, கீழே கையொப்பம் இட்டு இருப்பவர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அடமானமாகியுள்ள அசையாச் சொத்துகளின் விற்பனைக்கு உத்தரவிட்டுள்ளார்.

நீங்கள் இதன் மூலம் அறிவிக்கப்படுவது யாதெனில், விற்பனைப் பிரகடனத்தை தயாரித்தல் மற்றும் அதற்கான விதிகளை அமைத்தல் ஆகியவற்றுக்கு 10.12.2024 பிற்பகல் 3.00 மணி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முன்சொன்ன சொத்து அல்லது அதன் ஏதேனும் பாகம் மீது ஏதேனும் வில்லங்கங்கள், கட்டணங்கள், உரிமை கோரல்கள் அல்லது கடன் பொறுப்புகள் இருந்தாலோ அல்லது அந்த சொத்து அல்லது அதன் ஏதேனும் பாகம் மீது கணக்கிடப்பட்ட வருவாய் இருந்தாலோ அதை கீழே கையொப்பம் இட்டுள்ளவரின் கவனத்துக்கு கொண்டு வருமாறு நீங்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

**சொத்து விபரம்**

3.76 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலம் அமைவிடம்: R.S.எண். 57, சாலை எண். 62-க்கு மேற்கில் அமைந்துள்ளது. ரெட்டிப்பட்டி கிராமம். எல்லைகள்: வடக்கு: அனுமத்ராயன் நிலம் தெற்கு: நல்லி கவுண்டர், செர்ரிய கவுண்டர் மற்றும் நாகி கவுண்டர் சொத்து கிழக்கு: திருச்சி செல்லும் சாலை மேற்கு: மாலைகட்டி, கருப்பண்ண பிள்ளை, கோபால் பிள்ளை, அங்கம்மாள், கவுலியன் என்ற பெருமாள் கவுண்டர் சொத்து இதனுடன் அங்குள்ள வீடு. நாமக்கல் சார் இணை-I சார் பதிவு மாவட்டம் மற்றும் நாமக்கல் பதிவு மாவட்டத்தினுள் அமைந்துள்ளது.

நாளது தேதி 2024 நவம்பர், 5ஆம் நாள் அன்று இத்தீர்ப்பாயத்தின் முத்திரையுடன் எனது கைப்பட அளிக்கப்பட்டது.

SEAL

ஒம்/-
(P. பிரேம் குமார்)
மீட்பு தீர்ப்பாயம்
05.11.2024



**அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிமிட்டெட்**

CIN : U65999MH2002PLC134884 வலைதளம் : www.arcil.co.in

(ஸ்ரீ பாலாஜி லூப்ரிகன்ட் – ன் நிதிச்சொத்துக்கள் தொடர்பாக உருவாக்கப்பட்ட **Arcil–Arcil–SBPS 073–I Trust** – ன் அறங்காவலர் என்ற தகுதியில் செயல்படுவது)

ஆர்சில் அலுவலகம் – "தி ரூபி", 10 வது தளம், 29, சேனாபதி பாபட் மார்க், தாதர் (மேற்கு), மும்பை – 400 028

**பிணைச்சொத்து பாதுகாப்பு மற்றும் நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைச்சொத்து பாதுகாப்பு அமலாக்கம் சட்டம் "2002 (சர்ஃபாசி சட்டம்) – உடன் படிக்க – பிணைக்காப்பு அமலாக்கம் விதிகள் 2002 ன் விதி 6, 8 & 9 ன் கீழான அதிகாரத்தை செயலுறுத்தி ஆன்லைன் மூலம் நடைபெறும் மின்னணு ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு**

இதன் மூலம் பொது மக்களுக்கும் குறிப்பாக கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) / அடமானதாரர்(களுக்கு) அறிவிக்கப்படுவது யாதெனில், **Arcil–Arcil–SBPS 073–I Trust** (ஆர்சில்) – ன் அறங்காவலர் என்ற தகுதியில் செயல்படும் (**DBS** பேங்க் ஆனது ஆர்சில் – க்கு, பதிவு செய்யப்பட்ட 23 டிசம்பர் 2022 தேதிய பணி ஒப்படைவு ஒப்பந்தத்தின் வாயிலாக, நிதிச்சொத்துக்கள் பணி ஒப்படைவு செய்யப்பட்டதற்கிணங்க) அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிமிட்டெட் – க்கு அடமானம் / கடன் பொறுப்பு ஏற்படுத்தப்பட்ட இதன் கீழ் விவரிக்கப்பட்ட அசையா சொத்து/க்கள், இதன் கீழ்க்கண்ட விபரங்களின் படியிலான நிலுவைத்தொகை மற்றும் மேற்கொண்டு வரும் வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவுகள் உள்ளிட்ட தொகையை வசூலிப்பதற்காக, பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு பிணைச்சொத்து பாதுகாப்பு அமலாக்கம் சட்டம் 2002 – உடன் படிக்க – பிணைக்காப்பு அமலாக்கம் விதிகள் 2002 ன் விதி 6, 8 மற்றும் 9 ன் கீழ், "'இருக்கின்ற இடத்தில்", "'இருக்கின்ற நிலையில்" "'இருக்கின்றவற்றுடன்" மற்றும் "'திரும்ப பெறத்தகாத வகையில்" என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.

| | |
|---|---|
| கடன்தாரர் பெயர் | **ஸ்ரீ பாலாஜி லூப்ரிகன்ட்.**, அதன் உரிமையாளர் திரு G S ராஜேந்திரன் என்பவரால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது., எண். 127/55D, திருச்செங்கோடு சாலை, நாமக்கல் – 637 001 |
| ஜாமீன்தாரர்கள் / கூட்டு கடன்தாரர்கள் / அடமானதாரர்களின் பெயர் | (1). திருமதி S வசந்தா, (2). திருமதி R ராஜேஷ்வரி, (3). திரு R ஜெனகன் (4). திரு R சில்லு |
| 03 அக்டோபர் 2024 தேதிய சர்ஃபாசி சட்டத்தின் படியிலான நிலுவைத்தொகை | 04 அக்டோபர் 2024 ம் தேதியின் படி, ரூ. 4,37,00,000/– (இந்திய ரூபாயில். நான்கு கோடியே முப்பத்து ஏழு இலட்சம் மட்டும்) மற்றும் ஒப்பந்த வீதத்தில் / ஆவணத்தில் உள்ள வீதத்தின் படி மேற்கொண்டு வரும் வட்டி மற்றும் 04 அக்டோபர் 2024 முதல் தொகையை திருப்பி செலுத்தும் வரை மேற்கொண்டு வரும் இதர நிகழ் செலவுகள் ஆகியன. |
| சுவாதீனம் | DBS பேங்க் ஆனது சர்ஃபாசி சட்டம் 2002 ன் கீழான ஏற்பாடுகளின் படி, 01 பிப்ரவரி 2019 அன்று அடையாள சுவாதீனம் எடுத்துள்ளது. |
| ஆய்வு தேதி | வேண்டுகோளின் பேரில் ஏற்பாடு செய்து தரப்படும். |
| டேவணித்தொகை | ரூ. 11,70,000/– (இந்திய ரூபாயில். பதினோரு இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) டேவணித்தொகையை RTGS மூலம் "Asset Reconstruction Company (India) Ltd" என்ற பெயருக்கு நடப்பு கணக்கு எண். 02912320000561 HDFC பேங்க் லிமிட்டெட்., கிளை – லோயர் பரேல், மும்பை, IFSC Code : HDFC0000291 க்கு செலுத்தப்பட வேண்டும். |
| விலைப்புள்ளி & டேவணித்தொகை சமர்ப்பிக்க கடைசி தேதி | 17.12.2024 மாலை 05.00 மணி வரை |
| அடிப்படை விலை | ரூ. 1,17,000,00/– (ரூபாய். ஒரு கோடியே பதினேழு இலட்சம் மட்டும்) |
| விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை | ரூ. 30,000/– (இந்திய ரூபாய். முப்பதாயிரம் மட்டும்) |
| மின்னணு ஏல தேதி & நேரம் | 18.12.2024 பிற்பகல் 02.00 மணி |
| விலைப்புள்ளி ஆவணங்களுக்கான இணைப்பு | www.arcil.co.in |
| ARCIL க்கு தெரிந்து நிலுவையிலுள்ள வழக்குகள் | அதிகாரப்பூர்வ அலுவலரின் சிறந்த அறிவுக்கும், தகவலுக்கும் எட்டிய வரையில், சொத்து மீது எந்த வில்லங்கமும் இல்லை |
| ARCIL க்கு தெரிந்த வில்லங்கங்கள் / நிலுவைகள் | அதிகாரப்பூர்வ அலுவலரின் சிறந்த அறிவுக்கும், தகவலுக்கும் எட்டிய வரையில், சொத்து மீது எந்த வில்லங்கமும் இல்லை |
| சேலம் விடப்படவுள்ள ஜாமீன் சொத்து விபரம் | அடமான சொத்துக்கள் விபரம் – திரு G S ராஜேந்திரன், திருமதி வசந்தா, திருமதி R ராஜேஷ்வரி, (3). திரு R ஜெனகன் (4). திரு R சிலு ஆகியோருக்கு சொந்தமான சொத்து – நாமக்கல் பதிவு மாவட்டம், நாமக்கல் இணை I சார்பதிவு மாவட்டம், நாமக்கல் டவுன், திருச்செங்கோடு சாலை, பழைய சர்வே எண். 300/4, தற்போது டவுன் சர்வே வார்டு A, ப்ளாக் 9, டவுன் சர்வே எண். 91 ஆக சர்வே செய்யப்பட்ட 2593–1/2 சதுர அடி அல்லது 0.06 ஏக்கர்க்கு தீர்வை ரூ. 0.32/– பரபெபளவு கொண்ட இடம் மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும்., இதன் அளவீடுகளாவன – தென்வடல் கிழக்கு – 52 அடி., மேற்கு – 62 அடி., கிழமேல் வடக்கு – 40 அடி., தெற்கு – 51 அடி. ஆகியன. எல்லைகளாவன பின்வருமாறு–மேற்கு – கருப்ப கவுண்டரின் ராஜா ஆயில் மில், வடக்கு மற்றும் கிழக்கு – விற்பவர் பழனியப்பன் மற்றும் அவரது மகன் முத்துசாமி ஆகியோரின் இதர இடங்கள், தெற்கு – நாமக்கல் திருச்செங்கோடு சாலை, |

**விதிகள் மற்றும் நிபந்தனைகளாவன :**

1). ஏல விற்பனையானது அதிகாரப்பூர்வ அலுவலரால் சர்ஃபாசி சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், அதன் உதவியுடன் மின்னணு ஏலம் மூலம் நடைபெறும். விலைகோரல் "'ஆன்லைன் மின்னணு விலைகோரல்" வாயிலாக வலைதளம் www.arcil.co.in மூலம் மட்டுமே நடைபெறும். ARCIL என்பது மின்னணு ஏலத்துக்கான தளத்தை ஏற்படுத்தி கொடுக்கும் சேவைதாரராகும்.

2). ஏலமானது விலைப்புள்ளி ஆவணத்தில் உள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளின் படியும் மற்றும் அதில் கொடுக்கப்பட்டுள்ள செயல்முறைகளின் படியும் நடத்தப்படும். ஏலதாரர்கள் ARCIL ன் வலைதளம் www.arcil.co.in யையும் அதில் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பு மற்றும் சேவைதாரர் ARCIL ன் வலைதளத்தையும் விலைப்புள்ளி ஆவணங்களுக்கும், ஏலத்துக்கு விடப்பட்டுள்ள ஜாமீன் சொத்துக்களின் விபரங்களுக்கும் / விலைப்புள்ளி படிவங்களை பெறுவதற்கும் பார்வையிடலாம்.

3). ஏலதாரர்கள் தங்களது சொந்த அலுவலகங்கள் / அவர்களது விருப்பத்துக்குரிய இடத்திலிருந்து விலைகோரி / விலைப்புள்ளி சமர்ப்பித்து மின்னணு ஏலத்தில் பங்கேற்கலாம். அந்தந்த ஏலதாரரால் இண்டர்நெட் இணைப்பை ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். அதிகாரப்பூர்வ அலுவலர் / ARCIL / சேவைதாரர் இண்டர்நெட் தொடர்பிழப்பு, நெட்வொர்க் பிரச்சினைகள், கணிப்பொறி செயலிழப்பு, மின் துண்டிப்பு போன்ற காணரங்களுக்கு பொறுப்பல்ல.

4). விபரங்களுக்கும், உதவிக்கும், செயல்முறைக்கும் மின்னணு ஏலம் தொடர்பான ஆன்லைன் பயிற்சிக்கும் உத்தேச ஏலதாரர்கள் திரு குருநாதன், திரு யுவிக் J, திரு மிரஜ் சயீத் ஆகியோரை தொடர்பு எண்கள். 9176500311, 9962005554, 9820485425 மின்னஞ்சல் முகவரி – gurunathan.solaiappan@arcil.co.in irfan.a@arcil.co.in meraj.sayed@arcil.co.in ல் தொடர்பு கொள்ளலாம்.

5). வாங்குவதில் விருப்பமுள்ளவர்கள் / ஏலதாரர்கள் தங்களது பெயர்களை இதன் மேற்குறிப்பிட்ட www.arcil.co.in ல் பதிவு செய்து கொண்டு, இதன் மேற்குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்தில் நடைபெறவுள்ள மின்னணு ஏலத்தில் பங்கேற்பதற்கான பயனாளி அடையாளம் மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை இலவசமாக பெற்றுக்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

6). சொத்து ஆய்வு மற்றும் கூடுதல் தகவல்களுக்கு உத்தேச ஏலதாரர்கள் திரு குருநாதன் 91765 00311 (அலைபேசி) gurunathan.solaiappan@arcil.co.in திரு இர்ஃபான் A 97878 62271 (அலைபேசி) irfan.a@arcil.co.in , திரு மிரஜ் சயீத், 98204 85425 (அலைபேசி) meraj.sayed@arcil.co.in அல்லது இதன் மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

7). ஏலத்தின் எந்த நிலையிலும், அதிகாரப்பூர்வ அலுவலர், எக்காரணமும் கூறாமல், எந்த முன்னறிவிப்பும் வழங்காமல், விலைப்புள்ளியை / விலைகோரலை ஏற்றுக்கொள்ள / நிராகரிக்க / மாற்ற / ரத்து செய்ய அல்லது ஏலத்தை ஒத்தி வைக்க உண்டான அதிகாரத்தை தன்னகத்தே கொண்டுள்ளவராவார்.

8). வாங்குவதில் பெற்றி பெற்றவர் / ஏலதாரரே சட்டபூர்வ நிலுவைகள் (ஏதேனும் இருப்பின்), வரிகள், செலுத்தத்தக்க கட்டணங்கள், வாங்கும் விலை மீதான GST, ஜாமீன் சொத்துக்களை தமது பெயரில் பரிமாற்றம் செய்ய வழங்கப்பெற சட்டப்படி செலுத்தப்பட வேண்டிய முத்திரை தீர்வை, பதிவு கட்டணம் போன்றவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

9). விருப்பமுள்ள ஏலதாரர்கள், தங்களது விலைப்புள்ளிகளை சமர்ப்பிப்பதற்கு முன்பே, ஏலத்துக்கு விடப்பட்டுள்ள ஜாமீன் சொத்து தொடர்பான சொத்துரிமை, வில்லங்கம் மற்றும் ஜாமீன் சொத்துஃகளை பாதிக்கும் கோரிக்கைகள் / சட்டபூர்வ நிலுவைகள் உள்ளிட்ட நிலுவைகள் போன்றவற்றை சுய சிரத்தையுடன் விசாரித்து தெரிந்து கொண்டிருக்க வேண்டும். இந்த ஏல விளம்பரம் ARCIL ன் எந்த பிரதிநிதித்துவத்தையோ உத்திரவாதத்தையோ வழங்கவில்லை., வழங்கப்போவதுமில்லை. ARCIL ன் அதிகாரப்பூர்வ அலுவலர் எந்த விதத்திலும் மூன்றாம் நபரின் கோரிக்கைகள் / உரிமைகள் / நிலுவைகளுக்கு பொறுப்பல்ல.

10). இந்த செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்டுள்ள ஏல அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும், இதன் கீழ்க்கையொப்பமிடப்பட்ட தபரின் சிறந்த தகவலுக்கு எட்டிய வரையில் கூறப்பட்டவையாகும்., எனினும் அதில் ஏதேனும் பிழையோ. நவறான கூற்றோ அல்லது தவிர்த்தல்களோ இருப்பின், அதன்கு இதன் கீழ்க்கையொப்பமிடப்பட்ட நபர் பொறுப்பல்ல.

11). ஏதேனும் நீதிமன்றம் / தீர்ப்பாயத்தின் தலையீடு / உத்தரவு காரணமாக ஏற்படும் நிகழ்வுகள் / பின் விளைவுகளால், விற்பனையை ரத்து செய்ய நேர்ந்தால், (பொருத்தமான சட்ட கருத்துரை மற்றும் ARCIL க்கு உள்ள சட்டபூர்வ தீர்வு) ARCIL ஆனது "'டேவணித்தொகை" யை வட்டியின்றி வாங்குபவர் / ஏலதாரருக்கு திரும்ப வழங்கிடும் மற்றும் / அல்லது "'விற்பனை செயல்முறைகள்" திரும்ப பெற்றுக்கொள்ளும். வாங்குபவரோ / ஏலதாரரோ ARCIL அல்லது அதன் அலுவலர்களுக்கு எதிராக, இழப்பு, செலவுகள் / செலவுகள் / வியாபார வாய்ப்பிழப்பு போன்ற எவ்விதத்திலான எந்த கோரிக்கையையும் எழுப்ப உரிமையில்லை.

12). மேற்சொன்ன நிலுவைத்தொகைகளுக்கு பொறுப்பாக உள்ள கடன்தாரர் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் இந்த விற்பனை அறிவிப்பை, இதன் மேற்குறிப்பிட்ட ஏல விற்பனை நடத்தப்படவிருப்பதற்கான, பிணைக்காப்பு அமலாக்கம் விதிகள் 2002 ன் விதி 8 மற்றும் 9 ன் கீழான அறிவிப்பு எனவும் கருதிக்கொள்ள வேண்டும்.

13). ஏதேனும் காரணத்துக்காக, இதன் மேற்குறிப்பிட்டவாறு ஏலம் நடைபெறவில்லையெனில், ARCIL க்கு பிணைக்காப்பு அமலாக்கம் விதிகள் 2002 ன் விதி 8(5) மற்றும் சர்ஃபாசி சட்டம் 2002 ன் கீழான ஏதேனும் இதர முறைகளின் கீழ், ஜாமீன் சொத்துக்களை விற்பனை செய்ய உரிமை உள்ளது.

ஒப்பம்/–
அதிகாரப்பூர்வ அலுவலர்
அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிமிட்டெட்
Arcil–Arcil–SBPS 073–I Trust (ஆர்சில்) – ன் அறங்காவலர்

இடம் – நாமக்கல்
தேதி – 13 நவம்பர் 2024



**Canara Bank** — A Government of India Undertaking — Syndicate

**மண்டல அலுவலகம் : தர்மபுரி**
நெ.68/2, கந்தசுவாமி வாத்தியார் தெரு, தர்மபுரி - 636701.
Ph : 04342-269410. Cell : 9487914228.

**மின் ஏல விற்பனை நாள் : 13-12-2024**

**கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதிச்சொத்துக்களை மறுசீரமைத்தல் சட்டம் 2002 மற்றும் பிணைகாப்பு நிதிச்சொத்துக்கள் அமலாக்க சட்டம் 2002-ன் கீழ் உள்ள விதி எண்.8(6)-ன் பிரிவு நிபந்தனைகளின் படி அசையாசொத்துக்களை விற்பனை செய்வதற்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு.**

பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்களுக்கு மற்றும் பிணையாளர்களுக்கு குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில் கீழே விவரிக்கப்பட்ட வங்கியில் அடமானம் வைத்துள்ள அசையா சொத்துக்கள் மற்றும் கடன் வழங்கிய வங்கிக்கு கடனுக்காக ஈடுசெய்யப்பட்டுள்ள அசையா சொத்துக்களை **கனரா வங்கியின்** அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் (possession) செய்துள்ள சொத்துக்களை **கடன் வழங்கிய வங்கி கிளைக்கு** வந்து சேரவேண்டிய **கடன் பாக்கித் தொகையினை வசூலிக்கும் பொருட்டு, அசையா சொத்துக்களை "உள்ளது உள்ளபடி", "உள்ளது உள்ளவாறு"**, மற்றும் **"உள்ள இடத்தில் உள்ளவாறு"** என்கிற அடிப்படையில் **13-12-2024** தேதியன்று **(காலை 11.30 மணி முதல் மதியம் 12.30 மணி வரை)** விற்பனை செய்யப்பட உள்ள மின் ஏல விற்பனை அறிவிப்பு இதன் மூலம் வெளியிடப்படுகிறது. மின் ஏல விற்பனையானது சேவை முகவரான **M/s PSB Alliance (Ebkray)**, through the website **https://ebkray.in/**

**கடன்தாரர்கள் / உத்திரவாதம் அளித்தவர்கள் / அடமானதாரர்களின் பெயர் & நிலுவைத்தொகை**

**பொம்மிடி கிளை. Cell : 9952301684.**

**திரு. V.மாணிக்கம் (கடன்தாரர்)**, த/பெ வெங்கடாசலம், 330, K.மோரூர் கிராமம், கனவாய்புதூர் கிராமம், காடையாம்பட்டி தாலுக்கா, சேலம் - 636354.

**நிலுவைத்தொகை 24-09-2023** அன்றுள்ளபடி **ரூ.9,13,640.93/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து பதிமூன்றாயிரத்து அறுநூற்று நாற்பது மற்றும் தொண்ணூற்று மூன்று பைசா மட்டும்)** மேலும் அதன் மீதான வட்டி மற்றும் இதர செலவுகள்.

**அசையா சொத்து விவரம் :** சொத்தின் நிலம் மற்றும் கட்டிடம் கீழே விவரிக்கப்பட்டுள்ளது. குடியிருப்பு நிலம் மற்றும் கட்டிடத்தின் (AC சீட் கூரை) MODTD பதிவுடன் EMT இதன் மொத்தப்பரப்பளவு 1652 ச.அடியானது சேலம் மாவட்டம் - 635354, பாப்பிரெட்டிப்பட்டி துணைப் பதிவு அலுவலகம், காடையாம்பட்டி தாலுக்கா, கனவாய்புதூர் கிராமம், நத்தம் ச.எண்.93/1A1, சப்டிவிசன் நத்தம் ச.எண்.688/8-ல் அமைந்துள்ளது. இச்சொத்து **திரு. V.மாணிக்கம்,** த/பெ. திரு. வெங்கடாச்சலம் பெயரில் உள்ளது. **எல்லைகள் : வடக்கே :** வீதி, **தெற்கே :** தங்கராசு வீட்டுமனை, **கிழக்கே :** பழனிவேல் வீட்டுமனை, **மேற்கே :** ராஜேந்திரன் வீட்டுமனை.

**ரிசர்வ் விலை : ரூ.16,11,000/- டேவணித்தொகை : ரூ.1,61,100/- ஏல உயர்வு : ரூ.50,000/-**
**டேவணித்தொகையை டெபாசிட் செய்ய கடைசி தேதி மற்றும் நேரம் : 12-12-2024-ம் தேதி மாலை 4.00 மணிக்குள்**

**for Payment of EMD Account Details : Canara Bank, BOMMUDI Branch, A/c No.209272434 IFSC Code: CNRB0004365**

For Detailed terms and conditions of the sale please refer the link "E-Auction" provided in Canara Bank's website (www.canarabank.com) or Contact Concerned Branch / Regional Office Dharmapuri, Mob : 7904115960 during office hours on any working day (or) Service provider : M/s PSB Alliance (Ebkray), Contact : 82912 20220. E-mail : psba@psballiance.com & support.ebkray@psballiance.com | https://ebkray.in/

இடம் : தர்மபுரி
தேதி : 08-11-2024

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
கனரா வங்கி